# மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

(திறன்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு)

TVEC

## தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் NCT (சிவில்/ கணிய அளவையியல்/ மின்னியல் மற்றும் இலத்திரனியல்/ இயந்திரவியல்) இனை தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 5 இற்கு சமன் செய்யும் பொது பரீட்சை

## தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் NCT (மின்னியல்/ இயந்திரவியல்) தொடர்பாக தேசிய தொழிற்தகைமை (NVQ)

1. தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (சிவில்/ கணிய அளவையியல்/ மின்னியல் மற்றும் இலத்திரனியல்/ இயந்திரவியல்) இனை தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 இற்கு சமமான தகைமையாக விருதளிப்பதற்காக பொது பரீட்சை ஒன்றினை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்டுமான தொழில்நுட்பவியல் (Construction Technology)/ கணிய அளவையியல் (Quantity Surveying)/ மின்னியல் தொழில்நுட்பவியல் (Electrical Technology)/ உற்பத்தி தொழில்நுட்பவியல (Production Technology)/ காய்ச்சி இணைத்தல் தொழில்நுட்பவியல் (Welding Technology)/ தன்னியக்க வாகன தொழில்நுட்டபவியல் (Automobile Technology)/ குளிர்விப்பான் மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்பவியல் (Ref & AC Technology) மட்டம் 5 தொடர்பாக அவற்றுக்குரிய தேசிய தேர்ச்சி தரங்கள் மற்றும் தேர்ச்சி அடிப்படையிலான பாடத்திட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் இப் பரீட்சையானது நடாத்தப்படும்.
2. 2013 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் மேற்கூறிய பாடநெறிகளுக்கு உள்வாங்கபட்ட சான்றிதழாளர்கள் மட்டுமே இப்பரீட்சைக்கு தோற்றமுடியும்.
3. பரீட்சை கட்டணமாக ரூபா 1,000.00 (ஆயிரம்) இனை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இக் கட்டணம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் 078100172266044 என்ற “மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு” இன் கணக்கு இலக்கத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை கட்டணம் மீண்டும் செலுத்தப்படமாட்டாது. கட்டணம் செலுத்தப்பட்டத்தற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. இவ் எழுத்து பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் தொழில் மீளாய்வொன்றின் பொருட்டு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அச் சந்தர்ப்பத்தில் ரூபா 2,000.00 கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும்.
5. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமானது தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “NCT (சிவில்/ கணிய அளவையியல்/ மின்னியல் மற்றும் இலத்திரனியல்/ இயந்திரவியல்) பொது பரீட்சை” என்றவாறாக உமக்குரிய பரீட்சையினை குறிப்பிட்டு “பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு, 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2020.01.31 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்புதல் வேண்டும்.

## தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (சிவில்/ கணிய அளவையியல்/ மின்னியல் மற்றும் இலத்திரனியல்/ இயந்திரவியல்) தகைமையினை தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 5 இற்கு சமன் செய்வதற்காக நடாத்தப்படும் பொது பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (தமிழில்) : ..................................................
   (ஆங்கிலத்தில்) : ..................................................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................
3. முகவரி (தமிழில்) : ..................................................
   (ஆங்கிலத்தில்) : ..................................................
4. மின்னஞ்சல் முகவரி : ..................................................
5. தொலைபேசி இலக்கம் : ..................................................
6. பாடநெறி காலம் : ..................................................
7. சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி : ..................................................
   (தயவுசெய்து சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியினை இணைக்கவும்)
8. விண்ணப்பதாரியின் உறுதியுரை : ..................................................
   8.1 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுயின் மக்கள் வங்கியின் கணக்கு இலக்கமான 078100172266044 இற்கு ரூபா 1,000.00 இனை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
   8.2 மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதனை சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி: ........................ கையொப்பம்: ..............................

பணிப்பாளர் நாயகம்,
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு,
நிபுணதா பியச, 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05